# கிழக்கிலங்கை வதனமார் சடங்கில் பரிவார தெய்வங்கள்: வில்லைகட்டுப் பத்ததி முறையினை அடிப்படையாகக் கொண்டது

# Retinue Deities in the Vathanamar Ritual of Eastern Sri Lanka: Based on the Villaikattu Paththathi System

*Uthayathevan Jeevatharsan [1]& Vannamani Gunapalasingam[2]*

[1]u.jeevatharsan861@gmail.com [2]gunapalasingamv@esn.ac.lk

## Abstract

This study, titled Retinue Deities in the Vathanamar Ritual of Eastern Sri Lanka, aims to identify the pantheon of deities associated with the long-standing tradition of Vathanamar worship in Eastern Sri Lanka. Although these practices are generally referred to as the Vathanamar ritual, Vishnu occupies a prominent position as the principal deity, alongside Lakshmi, Swathi Amman, and several other subsidiary deities. Considering the historical context in which the inhabitants of the Mullai (pastoral) region worshipped Vishnu for the prosperity and protection of their livestock, it is significant that Vishnu remains central to the Vathanamar tradition, which itself narrates heroic acts related to the taming and management of cattle. The Oor-Sutru Kaaviyam (Epic of Village Migration) indicates that the Vathanamar deities arrived in Eelam (Sri Lanka) from India through Trincomalee and subsequently travelled across Batticaloa. The places associated with their journey are believed to have later developed into sacred sites of worship. Vathanamar worship is traditionally performed according to three ritual systems: Villaikattu Paththathi, Velimadai Paththathi and Thulimadai Paththathi. Among these, the Villaikattu Paththathi system is regarded as the most elaborate, involving rituals that extend over several days and require intense devotional participation. The grand sacrificial rituals (Velvi) conducted at the Thampalakamam–Kantale tank reservoir and the Kathiraveli Vathanamar Mother Temple are recognized as major centers where the Villaikattu Paththathi system continues to be practiced in its traditional form. These two locations, which remain important contemporary centers of Vathanamar worship, constitute the geographical scope of this study. The primary objective of this research is to systematically identify the retinue deities worshipped within the rituals conducted at these sites. To achieve this objective,

[1] *MPhil Research Student, Eastern University, Sri Lanka.*

[2] *Department of Hindu Civilization, Eastern University, Sri Lanka.*

descriptive research methodology have been employed, together with a comparative approach to examine location-based variations in ritual practices.

**Keywords** : Eastern Sri Lanka, Vathanamar Worship, Retinue Deities

**ஆய்வுச் சுருக்கம்**

*கிழக்கிலங்கை வதனமார் சடங்கில் பரிவார தெய்வங்கள் எனும் இவ்வாய்வானது, கிழக்கிலங்கையில் நீண்ட காலமாக வழிபடப்படுகின்ற வதனமார் வழிபாட்டுச் சடங்கில் இடம்பெறும் தெய்வங்களை அடையாளப்படுத்துவதாக அமைகின்றது. வதனமார் சடங்கு என்று பொதுவாகச் சொல்லப்படினும் அவற்றில் விஸ்ணுவைப் பிரதான தெய்வமாகக் கொண்டு இலக்குமி, சுவாதியம்மன் மற்றும் ஏனைய தெய்வங்கள் என்பன இடம்பெறவே செய்கின்றன. முல்லைநில மக்கள் கால்நடைகளின் செழிப்பிற்காக திருமாலை வழிபட்டமையை நினைவிற் கொண்டு பார்க்கின்ற வேளையில், கால்நடைகளை அடக்கி வீரதீர விளையாட்டுகள் நிகழ்த்தியதாகச் சொல்லப்படுகின்ற வதனமார், வழிபாட்டில் விஸ்ணு பிரதான தெய்வமாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. வதனமார், இந்தியாவிலிருந்து ஈழத்தின் திருகோணமலையை வந்தடைந்து, அங்கிருந்து மட்டக்களப்பை ஊடறுத்துப் பயணஞ்செய்தமை பற்றிய குறிப்பை, ஊர்சுற்றுக் காவியத்தில் காணமுடிகின்றது. இவர்கள் பயணஞ்செய்த இடங்கள், பின்னர் வழிபாட்டிடங்களாக அமைந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய வதனமார் வழிபாடானது, வில்லைகட்டுப் பத்ததி, வெளிமடைப் பத்ததி, துளிமடைப் பத்ததி எனும் முறையியல்கள் மூலம் வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் வில்லைகட்டுப்பத்ததி முறையிலான வழிபாடானது, நீண்டநேரம் ஒதுக்கி பல நாட்கள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. தம்பலகாமம் - கந்தளாய் திருக்குளத்து வேள்வி, கதிரவெளி தாய்க்கோவில் ஆகியன வில்லைகட்டுப் பத்ததி முறைப்படி வழிபாடு இயற்றப்படுகின்ற இடங்களாக அறியப்படுகின்றன. மேற்குறித்த இருவிடங்களும் சமகாலத்தில் வதனமார் வழிபாடு நடைபெறுகின்ற பிரசித்தமான வழிபாட்டிடங்களாகும். தற்போது வில்லைகட்டுப் பத்ததி மறைந்து அல்லது அருகிவிட்டபோதும் அவ்வம்சங்களுடன் மரபுரீதியான நடைமுறைகளையே பெரும்பாலும் பின்பற்றிச் செய்யப்படுகின்றமையை மனங்கொள்ள வேண்டும். இவ்விடங்களே ஆய்வு எல்லையாக அமைந்துள்ளது. இவ்விடங்களில் நடைபெறும் சடங்கில் வழிபடப்படும் பரிவார தெய்வங்களை அடையாளப்படுத்துவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. தெய்வ வழிபாட்டை அடையாளப்படுத்த விபரண முறையும் இடரீதியிலான வேறுபாடுகளை வெளிப்படுத்த ஒப்பியல் ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**திறவுச் சொற்கள்** *: கிழக்கிலங்கை, வதனமார் வழிபாடு, பரிவார தெய்வங்கள்*

**ஆய்வு அறிமுகம்**

*கிழக்கிலங்கையானது நீண்டகாலமாக பாரம்பரிய வழிபாடு நடைபெறுகின்ற இடமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வதனமாருக்கு சடங்கியற்றி வழிபடுவதனை 'வேள்வி' எனும் பெயரால் திருகோணமலை மற்றும் கதிரவெளிப் பகுதிகளில் அழைப்பதனைக் காணலாம். வதனமார் வழிபாடு, இலங்கையின் வடபகுதி மற்றும் கிழக்கிலங்கைப் பகுதிகளில் ஆரம்ப காலத்தில் பரவலாக நிலவியிருக்கின்றமையை பல்வேறு தகவல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. விவசாயம், கால்நடை வளர்ப்போடு தொடர்புடைய பல வகையான வழிபாட்டு முறைகள் காணப்படினும் அவற்றில் வதனமார் வழிபாடு பிரசித்தமானது. இத்தகைய வதனமார் வழிபாடு தொடர்பாக பொதுமைப்படுத்தப்பட்ட ஆய்வுகள் வெளிவந்திருப்பினும் வதனமார் சடங்கில் வழிபடப்படுகின்ற பரிவார தெய்வங்கள் தொடர்பான ஆய்வுகளை அவதானிக்க இயலவில்லை.*

*அந்தவகையில் வதனமாருக்குப் பத்ததிகளை அடிப்படையாகக் கொண்டு, பெரிய அளவிலான படையல் செய்து சடங்கு நிகழ்த்தும் வழக்கம் சில இடங்களிலேயே காணப்படுகின்றது. அவற்றில்*

*கந்தளாய், கதிரவெளி ஆகிய இடங்கள் வில்லைகட்டுப் பத்ததி முறைப்படி வழிபாடு இயற்றப்படுகின்ற இடங்களாக அறியப்படுகின்றது. இவ்வாய்வில் வதனமார் சடங்கில் வழிபடப்படுகின்ற தெய்வங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்குரிய வழிபாட்டுச் சடங்கானது ஒரே பத்ததி முறைப்படி அமையினும், எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக இடம்பெறாமைக்கு பல்வேறு விடயங்கள் காரணமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. இரு இடங்களிலும் இடம்பெறும் வழிபாட்டில் வழிபடப்படுகின்ற தெய்வங்களை வைத்துப் பார்க்கின்றபோது, இவ்விடயம் துலங்குகின்றது. இவ்வேள்விகளில் விஸ்ணு, இலக்குமி, சுவாதியம்மன் ஆகிய தெய்வங்களுக்கு முதன்மையளித்து வதனமாருக்கு பரப்புமடை வைத்து, ஏனைய தெய்வங்களுக்கும் வழிபாடு இயற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

**ஆய்வின் நோக்கம்**

*வதனமார் வழிபாடு என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும் விஸ்ணு பிரதான தெய்வமாகவும் சுவாதியம்மன் மற்றும் ஏனைய தெய்வங்கள், பரிவார தெய்வமாக வழிபடப்படுகின்றமை இவ்வழிபாட்டின் தனித்தவியல்பு எனலாம். இத்தகைய தெய்வங்களை அடையாளப்படுத்துவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.*

**ஆய்வுப் பிரச்சினை**

*வில்லைகட்டுப் பத்ததி முறையினைப் பின்பற்றி வழிபாடு இயற்றப்படினும் பரிவார தெய்வங்கள் யாவும் ஒரேமாதிரியாக அமையாமை ஆய்வுப் பிரச்சினையாக முன்வைக்கப்படுகின்றது. இருவிடங்களும் குளக்கோட்டன் தொடர்பான மரபைப் பின்பற்றுகின்ற இடங்களாக அமைந்துள்ள சூழலில் இவ்விடயம் அவதானிப்புக்கு உரியதாகின்றது.*

**ஆய்வு முறையியல்**

*இவ்வாய்வில் தெய்வவழிபாட்டை அடையாளப்படுத்த விபரண முறையும் இடரீதியிலான வேறுபாடுகளை வெளிப்படுத்த ஒப்பியல் ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

**இலக்கிய மீளாய்வு**

*வதனமார் சடங்கில் இடம்பெறும் பரிவார தெய்வங்கள் தொடர்பான விரிவான தகவல்களை, நூல்களில் காண்பதரிது. இருப்பினும் சி.கணபதிப்பிள்ளை பதிப்பித்த மகாமாரித் தேவி திவ்ய கரணி என்னும் நூலில் வதனமார் தொடர்பான வழிபாட்டுப் பாடல்களில், தெய்வங்கள் சிலவற்றின் பெயர்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கனகசபாபதி சரவணபவனின் இது குளக்கோட்டன் சமூகம்(2014) என்னும் நூலில், கந்தளாய் குளக்கட்டு வேள்வியில் வழிபடப்பெறும் சில பரிவார தெய்வங்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. சு.சிவரெத்தினம் என்பவரின் சடங்குகளினூடாக மட்டக்களப்பு(2008) எனும் நூலில் 'மட்டக்களப்பில் வதனமார் வரலாறும் சடங்கும்' எனும் தலைப்பில் நாதனையில் இடம்பெற்ற வில்லைகட்டுச் சடங்கு தொடர்பான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. எஸ்.தில்லைநாதனின் மட்டக்களப்பில் இந்துசமய கலாசாரம்(2006) என்னும் நூலில் வதனமார் வழிபாடியற்றும் பத்ததிகளான வெளிமடைப்பத்ததி, துளிமடைப்பத்ததி, வில்லைக்கட்டுப் பத்ததி உள்ளிட்ட விடயங்கள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இ.வடிவேல், பதிப்பித்த கோணேசர் கல்வெட்டில் (1993) குளக்கட்டின் காவல் தெய்வங்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய நூல்களிலும் பிற நூல்களிலும் பொதுவான வழிபாட்டம்சங்களுடன், இவ்விடயம் பெயரளவில் அமையப் பெற்றிருப்பினும் வதனமார் சடங்கில் இடம்பெறும் பரிவார தெய்வங்கள் தொடர்பான விரிவான விடயங்கள் இடம்பெறாமையினை இடைவெளியாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.*

***பரிவார தெய்வங்கள்***

*வதனமார் சடங்கில் பரிவார தெய்வங்கள் என்பது வழிபாட்டில் பிரதான தெய்வத்தைச் சுற்றி அவ்வழிபாட்டு எல்லைக்குள் அத்தெய்வத்தின் அருளாட்சிக்கும் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக விளங்கும் தெய்வங்கள் என வரையறுக்கலாம். கந்தளாய் மற்றும் கதிரவெளி ஆகிய இடங்களில் நடைபெறும் சடங்கில் வழிபடப்படும் பரிவார தெய்வங்கள் இங்கே ஆராயப்பட்டுள்ளன. பிள்ளையார், விஸ்ணு, சுவாதி அம்மன், அனுமார், சூரிய பகவான், கன்னிமார், பட்டாணித்தெய்வம், முனிகள், கிங்கிலியர் மற்றும் இதர தெய்வங்களுக்கும் மடை வைத்து வழிபடப்படுகின்றது. இத்தகைய தெய்வங்கள் யாவும் எல்லா வதனமார் சடங்குக் கோவில்களிலும் இடம்பெறுவதில்லை. இதற்குப் பிராந்திய வேறுபாடும் இதர விடயங்களும் காரணமாயிருக்கலாம். வதனமார் சடங்கில் வழிபடப்படும் தெய்வங்கள் தொடர்பாகப் பின்வருமாறு காணலாம்.*

***பிள்ளையார்***

*கிராமிய மரபில், எந்தவொரு நற்காரியத்தைத் தொடங்கும் போதும் மஞ்சளையோ அல்லது சாணத்தையோ பிள்ளையார் பிடித்து(பிடி பிடித்து) வழிபடுவது வழக்கம். காரியங்கள் தடையின்றி நிறைவேற வேண்டி, பிள்ளையாரை வழிபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்ச்சியாக ஆகம விதிமுறைகளுக்கு அப்பால் கிராமப்புற மக்களின் எந்தவொரு வழிபாட்டிலும் பிள்ளையாருக்கு முதலில் மடை வைத்து வழிபடுவது நீண்டகால வழக்கமாகக் காணப்படுகின்றது. அவ்வடிப்படையில் வதனமார் வழிபாட்டுச் சடங்குகளின்போது பிள்ளையாருக்கு மடை வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு இடங்களில் நடைபெறும் வேள்வியில் பிரதான கூடாரத்தினுள் பிள்ளையாருக்கு வைக்கப்படும் மடையில் வெற்றிலை, பாக்கு, பழங்கள் என்பன வைத்து அதன் மேல் சிவப்பு அல்லது மஞ்சள் நிறப்பட்டுச் சாத்தி வழிபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

***வி ஸ்ணு மற்றும் இலக்குமி***

*இந்துமதத்தின் உட்பிரிவுகளிலொன்றாகிய வைணவத்தின் முழுமுதற் கடவுளாக திருமால் போற்றப்படுகின்றார். திருமாலை வடமொழியில் வி ஸ்ணு எனும் நாமத்தால் போற்றுவர். இது பிற்காலத்திலேற்பட்ட வழக்கமாகும். விஸ்ணுவைப் பற்றிய மகிமையை வைணவ ஆகமங்களும், வி ஸ்ணு புராணம், நாலாயிர திவ்விய பிரபந்தம் முதலிய நூல்கள் தெரியப்படுத்துகின்றன. திருமால் வழிபாடானது, ஆகம முறையிலும், மரபுரீதியான முறையிலும் வழிபடப்படுகின்றது. விஸ்ணுவின் விக்கிரகங்களை மட்டுமல்லாது சங்கு, சக்கரங்களையும் வைத்து வழிபாடு நடைபெறுகின்றது. பொதுவாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் முல்லைநிலக் கடவுளாக திருமால் வழிபடப்பட்டு வந்தமையை 'மாயோன்மேய காடுறை உலகம்' எனத் தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது.*

*வதனமார் சடங்கில் விஸ்ணு பிரதான தெய்வமாக இடம்பெறுகின்ற, இம்முறையின் தோற்றப் பின்னணி எத்தகையது என்பது ஆய்விற்குரிய விடயமாகும். அதாவது, வதனமார் சடங்கில் மூலவராக விளங்குவது விஸ்ணுவும் இலக்குமியும் ஆகும். இதனை வெளிப்படுத்தும் வகையில் வதனமார் சடங்குக்கான பொருட்களைப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் பெட்டகத்தினுள் ஐம்பொன்னாலான விஸ்ணுவின் சிலையும் புல்லாங்குழலும் காணப்படுகின்றது. இதனை வதனமார் வழிபாட்டில் பாடப்படுகின்ற வழிபாட்டுப் பாடல்,*

***'சிலையும் குழலும் சிறப்புடன் வாழ்க'***

*எனக் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. கதிரவெளி வதனமார் சடங்கில், சிலை குழல் நீராட்டல் எனும் நிகழ்வில் இவ்விரண்டையும் அபிஷேகம் செய்விப்பதும் குறிப்பிடத்தக்கது. தம்பலகாமம் ஆலயத்தில் உள்ள பெட்டகத்தினுள் வெண்சங்குகள், சக்கரம் என்பன உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*இத்தெய்வங்களை இராசகால், கன்னிக்கால் போன்ற வடிவங்களில் முன்னிருத்தி வழிபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*கிழக்கிலங்கையில் பெருமளவில் காணப்படும் சிறு தெய்வவழிபாடுகளுக்கெல்லாம் நிலைக்களனாக விளங்குவது மரங்களே. இதனால் தெய்வங்களின் பெயரால் மரங்களும் மரங்களின் பெயரால் தெய்வங்களும் அழைக்கப்படுகின்ற வழக்கினை பாரம்பரியமாகக் காணலாம். மரங்களில் தெய்வங்கள் உறைவதாகவும் இவை நோய் நீக்கத்திற்குரிய சக்தியைக் கொண்டமைந்துள்ளதாகவும் நம்பப்படுகின்றது. இந்தியாவின் வடபகுதியில் துளசியை சாளக்கிராமத்தோடு சேர்த்து பூசிப்பவர்கள் நல்வாழ்வு வாழ்ந்து முத்திபெறுவர் எனும் நம்பிக்கை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. கார்த்திகை மாதத்தில் ஏகாதசிக்கு அடுத்தநாள் துளசியை மகாவிஸ்ணு திருமணம் செய்ததாகப் புராணம் கூறுகின்றது. இதனை அடிப்படையாக வைத்து துளசி விவாகம் அல்லது துளசி கல்யாணம் ஓர் இந்துப் பண்டிகையாக முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதில் சாளக்கிராமம் அல்லது நெல்லி மரக் கிளையுடன் துளசிக்கு சம்பிரதாயத் திருமணம் நடைபெறுவதாகும். இந்து மதத்தில் இந்நிகழ்வு பருவமழையின் முடிவையும் திருமண பருவத்தின் தொடக்கத்தையும் குறிப்பதாகச் சொல்லப்படுகின்றது.*

*இத்தகைய முறைமையினை ஒத்ததாகவே கதிரவெளி வதனமார் வேள்வியில் இராசகாலை(பூவரச மரத்தாலான தடி) விஸ்ணுவாகவும் கன்னிக்காலை(செங்கரும்பு) இலக்குமியாகவும் கருதி, இவ்விரண்டையும் மேற்கட்டி பிடித்து உரிய மரியாதைப்படி கொண்டுவந்து வதனமார் வேள்வியில் மூலவராக வைத்து வழிபடுவதும் வதனமார் சடங்கில் விஸ்ணு வழிபாட்டின் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கூடாரத்திற்குள் நேராக வைக்கப்படும் மூன்று மடைகளில், ஒன்று குத்துமடையாகும். இது விஸ்ணுவுக்குரியது அம்மடையில் நெல்பரவி அதன் மேல் வெற்றிலை, பாக்கு, பழங்கள் வைத்து அதன் மேல் கறுப்பு நிறப்பட்டுச் சாத்தி வழிபடப்படும். அதற்கு அருகிலே இலக்குமிக்கும் மடைவைத்து வழிபடுவதும் குறிப்பிடத்தக்கது. இரு இடங்களிலும் செங்கரும்பு இலக்குமியாக கொள்ளப்படுகின்ற அதேவேளை, கந்தளாய்குளத்து மகாவேள்வியில் வெடுக்குநாறி மரம் விஸ்ணுவாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலத்தில் சந்தன மரம் உபயோகிக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.*

**சுவாதியம்மன்**

*வதனமார் வழிபாட்டு அம்சங்களில் சுவாதியம்மன் வழிபாடும் ஒன்றாகும். அந்தவகையில் சில புராணக்கதைகளில் சுவாதியம்மனும் மாரியம்மனும் விஸ்ணுவின் மறுவடிவமாக அடையாளப்படுத்தப்படுவதைக் காணலாம். 'கண்ணனார் உருவம் மாரித்தாயருள் காக்க வேண்டும்' எனும் பாடலடி இதனைக் குறித்துரைக்கின்றது. (கோபாலசிங்கம். சீ., 2012: 83) சுய ஆதி அம்மனே சுவாதி அம்மனாக மருவியதென்பது சில ஊர்ப் பெரியவர்களின் கருத்தாகவும் அமைகின்றது.(மேலது ப.36) வதனமார் யானைகட்டு அகவல்,*

***'...செப்பரிய பூமுலையாள் சுவாதியம்மை தன்னருளால்...'****(கணபதிப்பிள்ளை. சி., 1971: .221)*

*என்றவாறு குறிப்பிடுகின்றது. இப்பாடற் பகுதியில் சுவாதியம்மன், வதனமார் பிறப்புக்கு காரணமான ஒரு தெய்வமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று, வெள்ளைக்கிடாவால் வெட்டப்பட்டு இறந்த வதனமாரை சுவாதியம்மன் உயிர்ப்பித்து எச்சில்பட்ட நீங்கள் இனி இங்கு வரக்கூடாது, பட்டிகளில் பாலமிர்தம் உண்டுபண்ணி வாழும்படி கூறிச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது. இச்செய்தி குழுமாடுகட்டு அகவலில்,*

***'...எல்லோரும் நில்லுமென்று ஏகினாள் சுவாதியம்மன்.'****(கணபதிப்பிள்ளை,சி., 1971, ப.230) என்றவாறு அமைந்துள்ளது. வதனமாரை உயிர்ப்பிக்க கூடிய ஆற்றலும் கருணைத்திறமுறையவராகவும்*

இப்பாடலில் வர்ணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றில், வதனமாரைப் படைத்து, காத்த தெய்வமாக சுவாதியம்மன் காட்டப்பட்டுள்ளாள். ஆனால் வதனமார் பொங்கல் வழிபாட்டுக் காவியத்திலே, வதனமாரின் தாய் சுவாதியம்மன் எனும் நேரடியான தகவலைக் காணமுடிகின்றது. அதுமாத்திரமின்றி மங்கலனாரின் தம்பிமாரே வதனமார் என்னும் செய்தியையும் இப்பகுதியின் ஊடாக அறிய முடிகின்றது. இவற்றை,

***'சுவாதியம்மை திருமகனாம் சுடர்சோதி நயினார்...'****(கணபதிப்பிள்ளை,சி: 1971)*

***'...தம்பிமாராம் வதனமார் தன்னுடனே வந்து...'****(கணபதிப்பிள்ளை,சி: 1971)*

எனும் பாடற்பகுதிகள் இதற்கு வலுச்சேர்க்கின்றமை குறிப்பிடத்தக்கது. எதுஎவ்வாறு இருப்பினும் வதனமார் வழிபாட்டில் பிரதான தெய்வமாக சுவாதியம்மன் வழிபடப்படுகின்றமை மனங்கொள்ளத்தக்கது.

கதிரவெளி வதனமார் வேள்வியில் பிரதான கூடாரத்தினுள் சுவாதியம்மனுக்கு நெல் பரவி, மண் முட்டி வைத்து, அதன்மேல் தேங்காய் வைத்து, மடைப் பொருட்கள் வைப்பதோடு, அதன் மேல் பச்சை நிறப்பட்டு சாத்தி வழிபடப்படுகிறது. கும்பத்தில் பச்சைப்பட்டுச் சாத்துவதும் தெய்வமாடுபவர் பச்சைச் சேலையுடுத்தி வழிபடுவதும் இதன்பாற்பட்டதே. இவ்வாறு சுவாதி அம்மனை கும்பத்தில் நிறுத்தி வழிபடுவதோடு, சுவாதியம்மன் உருவேறியாடல் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. சுவாதியம்மனை, அதிவல்லமைமிக்க தெய்வமாகக் கருதி வழிபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பட்டாணித் தெய்வம்**

பட்டாணி என்பது யார் என்பதில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுவது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் கிழக்கிலங்கை கிராமிய வழிபாடுகளிலும் வேடுவ வழிபாடுகளிலும் பட்டாணி வழிபாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புற மக்கள் சமயங்களுக்கும் நிறுவனமயப்பட்ட மதங்களுக்கும் அப்பாற்பட்ட நம்பிக்கைகளைக் கொண்டவர்கள். ஒரு தெய்வம் எந்த மதத்தைச் சேர்ந்ததாக இருப்பினும் அத்தெய்வம் நன்மை பயக்கும் என்று நம்பிவிட்டால் அத்தெய்வத்தை வழிபடத் தயங்கமாட்டார்கள்.*(செல்வராசு. நா., 2001: 86)* அந்தவகையில், பட்டாணி எனும் தெய்வம் இஸ்லாமியருடன் தொடர்புடையது என்ற கருத்துநிலையினை அடியாகக் கொண்டுள்ளதாயினும் அத்தெய்வத்தின் தோற்ற வரலாறு பற்றிய கருத்தமைவு மிகைப்படுத்தப்பட்ட புனைவாகக் காணப்படுகின்றது.*(சுமன். பா., 2016: 47,48)* பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வங்கள் கிழக்கிலங்கைக்கு இந்தியாவிலிருந்து வந்ததென்றுதான் அறியப்படுகின்றது. அந்தவகையில், தமிழ்நாட்டில் இருந்து திரௌபதை வழிபாடு பரவியபோது பட்டாணி எனும் தெய்வம் இங்கு நிலைகொண்டது என்ற கருத்தே வலுப்பெறுகிறது. *(மேலது: 51)*

பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தில் நிலைபெற்றுள்ள பட்டாணித் தெய்வம் ஈழத்தில் திரௌபதை வழிபாடு பரவுகையடைந்தபோதே நிலைபெற்ற தெய்வம் என்பதும், பட்டாணி ராவுத்தராக வழங்கிய அத்தெய்வம் காலப்போக்கில் பட்டாணி என வழங்கலாயிற்று என்று கொள்வதே பொருத்தமானது. இவ்வாறு நிலைகொண்ட பின்னர் அதன் அடுத்தகட்ட பரவுகையாக தாழங்குடா பெரியதம்பிரான் ஆலயம், பரமநயினார் ஆலயம் என்பவற்றில் பட்டாணிக்கு மடைபரவுதல் என்ற தளத்தையும் வேடுவர்களின் வழிபடு தெய்வமாகவும் தளவிரிவாக்கம் பெற்றிருக்கலாம் *(மேலது: 57)* எனும் கருத்தும் அவதானிப்புக்குரியது. எனினும் சில நூல்களில் மட்டக்களப்பில் திமிலரை விரட்ட, முக்குகருக்கு உதவிய பட்டாணியர் நினைவாக இவ்வழிபாடு இயற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றமையையும் அவதானிக்க முடிகின்றது.

அதேபோன்று பட்டாணித் தெய்வத்திற்கு மடை வைத்து வழிபடும் முறை, கதிரவெளி - பெரியசுவாமி வழிபாட்டிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆய்வமைவிடங்களில் நடைபெறும் வதனமார்

வழிபாட்டிலும் பட்டாணி வழிபாடு காணப்படுகின்றது. இவ் வழிபாட்டில் பட்டாணி மடையானது, பிரதான கூடாரத்திற்கு வெளிப்புறத்தில் இளந்தாரி மடைக்கு அண்மையில் வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கந்தளாய்க் குளத்து வேள்வியில் ஏழு இராசாக்களின் மடை வைக்கப்படுகின்றது. இவ்வேழு மடைகளில் ஒன்று பட்டாணி மடையாக இருக்கும். இப்பூசையில் வைக்கப்படும் படையலை இஸ்லாமியருக்கு வழங்குவது நடைமுறையாகும். இதேபோன்று நாயன்மார்திடல் மடையிலும், திருகோணமலைப் பிராந்தியத்தின் சில கோயில்களிலும் பட்டாணிக்கு வழிபாடியற்றும் வழக்கமுள்ளதாக அறியப்படுகின்றது.

**கன்னிமார்**

இனக்குழு சமுதாயத்தின் தொடக்க காலந்தொட்டு செழுமையின் அடையாளமாகவும் வளமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டதால் பெண் வழிபாட்டிற்கு உரியவளானாள். பண்டைய தமிழ் இலக்கியங்களிலும் பெண் தெய்வப் பெயர்கள் மற்றும் வழிபாடுகள் பற்றிய குறிப்புகளைக் காணமுடிகின்றது. மனித உயிர்கள் அனைத்தையும் பெற்றெடுத்தவள் என்ற அடிப்படையில் தாயாகவும் என்றும் அழியாத கன்னித்தன்மையுடையவள் எனும் அடிப்படையில் கன்னியாகவும் பெண் தெய்வங்களை வழிபடும் மரபு காணப்படுகின்றது. உலகின் பல்வேறு பாகங்களிலும் உள்ள இனக்குழு மக்களிடத்தேயும் இவ்வழிபாடுகளைக் காணமுடிகின்றது. இதுவே பெண்தெய்வ வழிபாடு தோன்றி வளர்வதற்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

கன்னி என்ற சொல்லுக்கு கன்னித்தன்மை இழக்காத பெண் என்று அகராதி பொருள் கூறுகின்றது. அந்தவகையில், கன்னிமார் ஏழு பேர் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. இக்கன்னிமார் பற்றிய செய்திகளை பழந்தமிழ் இலக்கியங்களிலும் கண்டுகொள்ள முடிகின்றது. இந்து மரபில் பொதுவாகக் கன்னிமார் தொடர்பாக இருவிதமான வழிபாட்டு முறைகள் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது ஆகம வழிபாட்டில் சப்தமாதர் என்றும் பாரம்பரிய மரபில் ஏழு கன்னியர் எனவும் இரண்டு விதமான வழிபாடுகளைப் பொதுவாகக் காணவியலும். கிராமியச் சடங்குகளில் உள்ள கன்னிமார் வழிபாட்டிற்கும் 'சப்தமாதர்' எனப்பட்ட ஏழு கன்னிகள் வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கலாம்.(குணபாலசிங்கம். வ., 2024: 139)

கன்னிமார் வழிபாடு கிழக்கிலங்கையில் கிராமிய வழிபாட்டில் மிகுந்த முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. அதேபோன்று கிழக்குக் கரையோர வேடுவர்களிடமும் கன்னிமார் வழிபாடு நிலவுகின்றது. இவ்வழிபாடானது கிழக்கிலங்கையில் வதனமார் வழிபாட்டிலும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. குறித்தவிடங்களில் நடைபெறும் வதனமார் வேள்வியில் பிரதான கூடாரத்தினுள் கன்னிமாருக்கு, படையலிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கதிரவெளியில் மேற்குத்திசை நோக்கியமைக்கப்பட்ட பிரதான கூடாரத்தினுள் அதேதிசையின் வலது புறத்தில் நெல் பரப்பி அவற்றின் மீது ஏழுகும்பங்கள் வைக்கப்பட்டு வழிபாடு இயற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அநுமார், கருடன்**

இராமாயண கதாபாத்திரங்களில் ஒன்றாக அறியப்படுகின்ற ஆஞ்சநேயர், வைணவ சம்பிரதாயத்தில் பிரதானமாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஈழத்திற்கும் ஆஞ்சநேயருக்கும் இருக்கின்ற தொடர்பு இதிகாசங்களில் ஒன்றான இராமாயண காலத்திற்குரியதாகவும் அதனை புலப்படுத்துகின்றதான வரலாற்றிடங்கள் பல இலங்கையில் உள்ளமை பலரும் அறிந்த விடயமாகும். இலங்கையில் ஆஞ்சநேயர் கிராமியத் தெய்வங்களுடன் இணைத்து வழிபடுதல், ஆகம முறையில் வழிபடுதல் எனும் இருமுறைகளில் வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் வதனமார் வேள்வியில் அநுமார் வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பிரதான தெய்வங்களாக விஸ்ணு, இலக்குமி ஆகிய தெய்வங்கள் வழிபடப்படுகின்றமை, வைணவத் தொடர்பைக் கொண்டிருப்பினும்

*கிழக்கிலங்கையில் உள்ள பெரும்பாலான சடங்குக் கோயில்களில் ஆஞ்சநேயர் துணைத்தெய்வமாக அமைகின்றமையையும் மனங்கொள்ள வேண்டும். ஆய்வமைவிடங்களில் உள்ள வதனமார் வேள்வியில் ஆஞ்சநேயர் பரிவார தெய்வமாக வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*அதேபோன்று, வைணவ மரபில் 'பறவைகளில் நான் கருடன்' என்று கருடனைப்பற்றி பகவான் தமது பகவத்கீதையில் கூறியுள்ளார். அதேபோன்று, ஆழ்வார்கள் நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் பலவிடங்களில்(36) கருடனைப் போற்றிப் பாடியிருக்கின்றனர். அத்துடன் 'பெரிய திருவடி' என்று கருடன் விஸ்ணுவின் வாகனமாகவும் கொள்ளப்படுகின்றது. இருபெரிய இறக்கைகளுடன் மனித தோற்றத்துடன் வளைந்த மூக்குடன்(பறவை அலகு) பெருமாள் எதிரே நின்ற கோலத்திலும் வாகனமாக, திருமாலை எழுந்தருளச் செய்யும்போது அமர்ந்த நிலையில் வைணவத்தலங்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. விஸ்ணு, வதனமார் வழிபாட்டில் முக்கியம் பெறுகின்றமையால், கருடன் இங்கு வழிபடப்பட்டிருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது. கந்தளாய்க் குளத்து வேள்வியிலும் இவ்விரு தெய்வ வழிபாடு இயற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கதிரவெளி வேள்வியில், பிரதான மடையின் அருகில் அநுமாருக்கும் வலது புறத்தில் கருடனுக்கும் மடை வைத்து வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

***சூரியன்***

*பொதுவாக இயற்கை சக்திகளை வழிபடுகின்ற முறைமை நீண்டகால வழக்கமாகும். தெய்வ அம்சமளித்து சூரிய தேவனாக சூரியன் வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சூரிய வழிபாடானது, மிகப்பழமையான வழிபாட்டு மரபுகளுள் ஒன்றாகவும் ஆகமநெறிப்பட்ட வழிபாட்டிலும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. தைத்திருநாள் உள்ளிட்ட தமிழர் பண்டிகைகளிலும் மாட்டுப்பொங்கல் போன்ற தொழில்முறைசார் அம்சங்களிலும் விசேடமான இடத்தைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் வதனமார் வழிபாட்டிலும் சூரியனுக்கும் வழிபாடு இயற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை,*

***'தென் மீது சூரியனுக்கும்...'*** *எனவரும் செய்யுள் குறிப்பிடுகின்றது.*

***கிங்கிலியர்***

*இலங்கையில் தமிழர் வாழும் பாகங்களில் கிங்கிலியர் வழிபாடு காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் சிறு கோயில் அமைத்தோ, வெளியில் வைத்தோ வழிபடும் மரபே காணப்படுகின்றது. மட்டக்களப்பில் கிராமியக் கோயில்களில் பரிவார தெய்வமாக வழிபடும் மரபு காணப்படுதல் குறிப்பிடத்தக்கது. திருகோணமலை ஆலங்கேணியில் சிறியளவிலான தனிக்கோயில் உண்டு. இத்தெய்வம் மாந்திரிக நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெறும் ஒன்றாகவே அறியப்படுகின்றது. தீய மந்திரச் செயல்களிலிருந்து தங்களைக் காக்கும் தெய்வமாகவும் வழிபடப்படுகின்றது.*

*திருகோணமலை, ஆலங்கேணி பகுதியில் கிங்கிலியர் இடர்களையும் தெய்வமாகவே கருதப்படுகின்றது. குளக்கோட்டன் கந்தளாய்க் குளத்தை கட்டியபோது அதற்கு காவல் தெய்வமாக கிங்கிலியரை ஸ்தாபித்ததுடன் தொடர்புடையதாக இப்பிராந்தியத்திலுள்ள கிங்கிலியர் வழிபாடு காணப்படுகின்றது. இது கல்லாலான தெய்வமாகக் காணப்பட்டாலும் சிற்சில இடங்களில் சூலத்திலும் வைத்து வழிபடப்படுகின்றது. கிண்ணியா, ஆலங்கேணி கிங்கிலியர் கோயிலில் வைகாசி அமைவாசைதோறும் மடை பரவி வழிபடப்படுவதோடு கருப்புநிற ஆட்டுக்கடா பலியிடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.*

*கந்தளாய் குளக்கட்டு மலையில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட 'கிங்கிலியர்'(சரவணபவன். க., 2014: 102) திருக்குளத்தின் பிரதானமான காவல் தெய்வமாகக் குறிப்பிடப்படுகின்றது. இத்தெய்வத்திற்கு*

*பூசகரும் மிகுந்த கவனத்துடன் பூசை செய்ய வேண்டும் தவறு நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். (நேர்காணல்: துரைநாயகம், வயது-72, பட்டிமேடு, தம்பலகாமம்.) இத்தெய்வம் திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் சக்திவாய்ந்த தெய்வமாகக்கருதி வழிபடப்படுகின்றது.*

***பூதபப்பரவர் பூசை***

*பூதபப்பரவர் என்பதை கோணேசர் கல்வெட்டில், அதன் பதிப்பாசிரியர் இ. வடிவேல் பற்பல பூதங்கள் என்று குறிப்பிடுகின்றமை கருத்திற்கொள்ளத்தக்கது. எனினும் ராஜகளரியில் பூதபப்பரவருக்கு பாதி வெற்றிலை, பாதி பாக்கு, பாதி பழம் வைத்து பூசை வழிபாடு இடம்பெறும். திருக்குளத்துக் கட்டிலே காவலுக்கென இருத்தப்பட்ட இக் காவல் தெய்வத்திற்கு நடைபெறும் பூசையின்போது குறிப்பிட்ட சிலரே இங்கு செல்வது வழக்கமான நடைமுறை என்பது வழிபாட்டாளர்களின் நம்பிக்கையாக உள்ளது. கதிரவெளி வழிபாட்டில் இப்பெயரிலமைந்த வழிபாட்டைக் காணவியலவில்லை.*

***ஏழு ராசாக்கள்***

*குளக்கட்டில் இருத்தப்பட்ட ஏழு காவல் தெய்வங்களுக்கு பூசை வழிபாடுகள் செய்யப்படும். இது ஏழு ராசாக்களின் பூசை எனக் கூறப்படும். இதற்குரிய வழிபாடு, ராஜகளரியின் கிழக்குத் திசையிலே குளக்கட்டின் கீழ்ப்பக்கமாக இடம்பெறும். ஏழு இராசாக்களாகக் குறிப்பிடுவோரை இனங்காண முடியாதுள்ளது.*

***இளந்தாரிமார்***

*இவ்வழிபாட்டில், இளந்தாரி மடை கூடாரத்துக்கு வெளியில் வைக்கப்படும் மடையாகும். இதனை மங்கலனார் மடை எனவும் அழைப்பர். ஆனால் மங்கலனாரை வதனமாரின் தலைவராகச் சடங்குப் பாடல்கள் குறிப்பிடுகின்றது. தரைவிரிப்பு விரித்து, அதன் மேல் வெற்றிலை, பாக்கு மற்றும் பலவகைப் பழங்கள் போன்றவற்றை வைத்து வழிபடப்படும் இம்மடையில் வெழுக்கயிறு, கருங்காலிப்பொல் என்பன வைக்கப்படுகின்றமை விசேட அம்சமாகும். பிரதான கூடாரத்திற்கு வெளியில் இம்மடை வைக்கப்படுவதனால் வதனமாரிலிருந்து வேறுபட்ட தெய்வமாக இருக்கமுடியும் என்ற ஊகமுண்டாகின்றது.*

***முனி வழிபாடு***

*இச்சடங்கின் பிரதானமான அம்சங்களில் ஒன்றாக கள்ளமடை வைத்தலும் குறிப்பிடத்தக்கது. சுமார் விடிசாம நேரம் மூன்று மணி அளவில் பிரதான பூசகருடன் மூன்று அல்லது ஐந்து நபர்கள் பிரதான கூடாரத்திலிருந்து மேற்குப் புறமாக சிறு காட்டினுள் மறைந்திருந்து மூன்று பிரதானமான முனிகளுக்கு சிறு மடையும் விளக்கும் ஏற்றி மெதுவாக கூவென சத்தமிட்டு(பூசையை ஏற்குமாறு) அப்பூசையை ஒப்புக் கொடுப்பதுடன் செல்லும் வழியைத் திரும்பிப் பார்க்காது பின்புறம் காட்டி சற்று வேகமாக வந்து பிரதான கூடாரத்தின் நுழைவாயிலில் சுவாதி அம்மனை மன்றாடி அடைக்கலம் தேடுவார்கள். இந்த கள்ளமடை வைக்கப்படும் மூன்று முனிகளின் பெயர்கள் இரகசியமானது என்பது ஐதீகம்.*

*கூடாரத்திற்கு வெளியிலும் ஒரு முனிக்கு வழிபாடு இயற்றப்படுகின்றது. பலி பூசையாக மேற்படி வில்லைகளில் கட்டப்படும் மாடுகளில் ஏதாவது ஒருமாட்டின் காதின் சிறுபகுதி, பிரதான பூசகரால் வெட்டப்பட்டு வெட்டிய துண்டுகளை மண் சட்டியில் எடுத்து வெளியில் வைக்கப்பட்ட மடையில் (ஒரு முனித்தெய்வத்துக்குரிய மடையில்) கவிழ்த்து மூடி பலி பூசை ஒப்புக்கொடுப்பர். பின்னர் பிரதான பூசகரும் துணைப் பூசகர்களும் அவ்விடத்தில் நீராடி புதிய ஆடை அணிந்து கொள்வது மரபு. கந்தளாய்க் திருகுளத்து வேள்வியில் வெட்டப்பட்ட மாடுகளின் காதின் சிறுபகுதி, இதற்குரிய மடையில் வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இரு ஆய்வமைவிடங்களிலும் முனிகளுக்கு வழிபாடியற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

***நிறைவுரை***

*இவை யாவற்றையும் தொகுத்து நோக்குவோமாயின் வதனமாருக்குச் சடங்கியற்றி வழிபடுகின்ற முறைமை பிரசித்தமானதாக அமைகின்றது. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாதனை வில்லைகட்டுச் சடங்கு நடந்ததாக அறியப்படுகின்றமை இவ்வழிபாட்டின் பழமைக்குச் சான்றாகும். கந்தளாய் திருக்குளத்து வேள்வி, கதிரவெளி வதனமார் வேள்வி என்பன சமகாலத்தில் முறையே முழுவில்லை, கால்வில்லை முறைப்படி வழிபாடு இடம்பெறுகின்ற பதிகளாக அறியப்படுகின்றது. இவ்வாறு வில்லைகட்டு முறைமையில், உள்ளமைந்த வேறுபாடும் குளக்கோட்டனால் கந்தளாய் குளக்கட்டில் வேறுபல தெய்வங்கள் நிறுத்தப்பட்டமை தொடர்பான நம்பிக்கைகளும் பிரதேச வழமைகளுமே இருவிடங்களிலும் ஒரேமாதிரியாக தெய்வங்கள் இடம்பெறாமைக்குக் காரணமென்று துணியலாம். வழிபாடுகள் ஆரம்பித்த காலப்பகுதியினை அறியமுடியாதவாறு இவ்விடங்கள் பழமை மிக்கதாகக் கருதப்படுகின்றது. எனினும் குளக்கோட்ட மன்னன் கந்தளாய் திருக்குளக்கட்டினைப் பாதுகாக்கும் நோக்கில் இருத்திய தெய்வங்களில் ஒன்றாக வதனமாரை, கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இத்தகைய வதனமாருக்கு வழிபாடு இயற்றுகின்றபோது, அவற்றில் அமைவுபெறுகின்ற ஏனைய தெய்வங்களை அடையாளப்படுத்த இவ்வாய்வு முனைந்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட தெய்வங்கள் தவிர இன்னும் பெயர் அறியப்படாத பலதெய்வங்கள் இவ்வேள்வியில் வழிபடப்படுகின்றமை அவதானிக்கத்தக்கது. இதனைப் 'பன்னீராயிரம் பேருக்கும் பாங்குடனே பூசை செய்து' எனவருகின்ற செய்யுட் பகுதி குறித்துரைப்பதனை மனங்கொள்ள வேண்டும்.*

***உசாத்துணைகள்***


- *கணபதிப்பிள்ளை, சி. (1971). மகாமாரித் தேவி திவ்யகரணி, யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்.*
- *கனகரத்தினம், இரா. வை. (2016). ஈழத்து நாட்டார் வழிபாடு, பேராதனை: பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை வெளியீடு.*
- *குணபாலசிங்கம், வ. (2024). கிழக்கிலங்கையில் முருக வழிபாடு வரலாறும் வழமைகளும், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.*
- *கோபாலசிங்கம், சீ. (2012). வெல்லாவெளி வரலாறும் பண்பாடும், மட்டக்களப்பு: வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய பழைய மாணவர் மன்ற வெளியீடு.*
- *சரவணபவன், க. (2014). இது குளக்கோட்டன் சமூகம், திருகோணமலை: திருகோணமலை வெளியீட்டாளர்.*
- *சுமன், பா. (2016). திரிதலிலிருந்து தெரிதல் - பண்பாட்டு உரையாடல், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.*
- *செல்வராசு, நா. (2001). 'நாட்டுப்புற வழிபாட்டில் நாகூர் ஆண்டவர்' தொல் தமிழர் சமயம், சென்னை: காவ்யா.*
- *மகேஸ்வரலிங்கம், க. (1996). மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், மட்டக்களப்பு: தில்லை வெளியீடு.*
- *மகேஸ்வரலிங்கம், க. (2008). மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், கொழும்பு: தமிழ்ச் சங்கம்.*
- *வடிவேல், இ.(பதி.) (1993). கோணேசர் கல்வெட்டு, கொழும்பு: இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.*